குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35/2015

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி.உஷா ராணி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பசவராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 56 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 13,02,2025**

**(1**ம் எதிரி ஆஜர்**, 2**ம் எதிரி இறந்துவிட்டார்**)**

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1- புகார் மனுவானது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றாலும், அதில் உள்ள கையெழுத்து நீல நிற மையினால் போடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். அ.சா.ஆ.1 – புகார் மனுவை காவல் துறையினர்தான் எழுதிக்கொண்டனர். அ.சா.ஆ.1 – புகார் மனுவில் அடித்தல் திருத்தல்கள் உள்ளது என்றால் சரிதான். களவுபோன செயின் ரசீதை நான் காவல் துறையினரிடம் சமர்ப்பித்தேன். அ.சா.ஆ.1- புகார் மனுவில் களவுபோன செயினானது என்ன வகை செயின்

என்று குறிப்பிட்டுத் தெரிவிக்கவில்லையென்றால் சரிதான்.

2) என்னிடம் செயின் பறித்த இரண்டு நபர்களும் தலைக்கவசம் அணிந்திருந்தனர், ஆகவே அவர்களை எனக்கு அடையாளம் தெரியவில்லை. இரண்டு சக்கர வாகனத்தில் எதிரிகள் வந்திருந்தனர், ஆனால் என்ன வகையான வாகனம் என்று எனக்குத் தெரியாது. வாகனத்தின் நிறம் எனக்குத்தெரியாது. எதிரிகளின் உடைகளின் நிறம் எனக்குத் தெரியாது. வழக்கு விபத்துச்சம்பவ இடம் கொஞ்சம் இருட்டாக இருந்தது. என்னிடம் களவாடப்பட்ட செயினானது அறுபட்டு பறித்துச்செல்லப்பட்டது. எனக்கு கழுத்தில் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. அ.சா.ஆ.1- புகார் அளித்த சமயத்தில் என்னுடன் இரண்டு நபர்கள் வந்திருந்தனர். அ.சா.ஆ.1 – புகார் அளித்து 2-3 மாதங்கள் கழித்து களவுபோன செயின் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு எனக்கு வழங்கப்பட்டது. வேறு செயினைத்தான் காவல் துறையினர் எனக்கு பெற்றுக்கொடுத்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35/2015

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜசேகரன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.சித்தநஞ்சப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 83 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 13,02,2025**

**(1**ம் எதிரி ஆஜர்**, 2**ம் எதிரி இறந்துவிட்டார்**)**

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். வழக்குச்சம்பவ தினமன்று நான்தான் வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1-ன் செயினை பறித்த நபர்கள் எந்த வாகனத்தில் வந்தனர் என்று எனக்குத் தெரியாது. வழக்குச்சம்பவம் நடந்த இடமானது இருட்டாக இருந்த காரணத்தினால் எந்த நிற உடையணிந்து எதிரிகள் வந்திருந்தனர் என்று எனக்குத் தெரியாது. களவு செய்த நபர்களில் யார் வாகனத்தை ஓட்டினார் யார் செயினைப் பறித்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. வழக்கு களவு

சம்பவம் குறித்து அ.சா.ஆ.1 – புகார் அளித்தபோது களவு போன நகைக்குரிய ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. களவுபோன செயினானது துண்டாகியிருந்தது என்றால் சரிதான். அ.சா.1-ற்கு கழுத்தில் காயங்கள் ஏற்படவில்லையென்றால் சரிதான்.

2) வழக்குச்சம்பவம் நடந்த தினமன்றே காவல் துறையினர் எங்களை விசாரித்தனர். சுமார் ஒரு வருடத்திற்கு மேல்தான் களவு போன செயினானது காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு எங்களுக்கு வழங்கப்பட்டது. எங்களுக்கு கொடுக்கப்பட்ட செயினானது கடையிலிருந்து வாங்கி வந்து கொடுக்கப்பட்டது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்
(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 35/2015

அ.சா. 6

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.நரேஸ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பசவராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 32 |
| The Hon'bl ஃ e Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 13,02,2025**

**(1**ம் எதிரி ஆஜர்**, 2**ம் எதிரி இறந்துவிட்டார்**)**
எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 311 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தெரிவித்த விவரங்களைத்தான் காவல் துறையினரிடம் வாக்குமூலமாக அளித்தேன் என்றால் சரிதான். வழக்குச்சம்பவம் குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 – புகார் அளித்த சமயத்தில் அ.சா.1 உடன் நானும் அ.சா.2-ம் சென்றிருந்தோம். அ.சா.ஆ.1 – புகார் மனுவினை காவல் துறையினரால் எழுதப்பட்டது. களவுபோன செயினின் ரசீதை காவல் துறையினரிடம் சமர்ப்பித்தோம். வழக்கு களவு சம்பவம் குறித்து கைபேசியில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடம் சென்று அங்கிருந்து காவல் நிலையம் சென்றோம். சுமார் ஒரு

வருடத்திற்கு மேல்தான் களவு போன செயினானது காவல் துறையினரால் கைப்பற்றப்பட்டு எங்களுக்கு வழங்கப்பட்டது. எதிரிகள் செயினை துண்டாக்கி களவுசெய்ததாகத்தான் அ.சா.1 விவரம்தெரிவித்தார் என்றால் சரிதான். அ.சா.1-ற்கு சிறிய காங்கள் கழுத்தில் ஏற்பட்டது. அ.சா.1-யை மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்துச்செல்லவில்லை. காவல் துறையினர் புதிய செயினைத்தான் எங்களுக்கு கொடுத்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஒம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.